ஆண்டறிக்கை

2011

விவசாயப் பட்டப் பின்படிப்பு நிறுவகம்
பேராதனைப் பல்கலைகழகம்

த. பெ. இல. 55, பழைய கலஹா வீதி
பேராதனை, இலங்கை

தொலைபேசி: 081-2389205, 2385517, 2388692
தொலை நகல்: 081-2388318
வெப்தளம்: www.pgia.ac.lk

உள்ளடக்கம்

		பக்கம்
1	தூர நோக்கு (Vision)	1
2	குறிக்கோள் (Mission)	1
3	பணிப்பாளரின் மீளாய்வு	2
4	வளங்களும் மாணவர்களும்	4
5	உள்நாட்டு மாணவர்கள்	4
6	வெளிநாட்டு மாணவர்கள்	4
7	கல்வி அலுவலர்கள்	5
8	கல்வி சாரா அலுவலர்கள்	5
9	ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் வெளியீடுகள்	5
10	நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்	6
11	பெறப்பட்ட விருதுகள்	6
12	புதிதாக ஆரம்பித்த கற்கைகள்	6
13	மீளெழும் செலவுகள்	7
14	மூலதன செலவுகள்	7
15	கருத்திட்டங்கள் (உள்நாடு,வெளிநாட்டு நிதிகள்)	7
16	கருத்திட்ட செலவுகள் (உள்நாடு,வெளிநாட்டு நிதிகள்)	8
17	நிதி முன்னேற்றம் (செலவுகள்)	8
18	நிதி முன்னேற்றம் (உருவாக்கிய வருமானம்)	8
19	நிதி விளைவு பகுப்பாய்வு - 2011	9
20	2011 இல் கிடைக்கப்பெற்ற அடிப்படை வசதிகள்	9
21	இவ்வறிக்கையுடன் தொடர்புடைய விளைவுகள், ஏனைய விடயங்கள்	9
22	கணக்காய்வு அறிக்கை 2011, பதில்களை	10

வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் 2011
விவசாய பட்டப் பின்படிப்பு நிருவகம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

1. தூர நோக்கு (Vision)

விவசாயம் மற்றும் அதனோடிணைந்த துறைகளில் பட்டப் பின் படிப்புக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் அடைவுகள் ஊடாக அரசாங்கத்தினதும், தொழில் துறையினதும், உலகளாவிய சமூகத்தினதும் தேவைகளுக்கான சேவையின வழங்குகின்ற ஒரு சிறந்த நிலையமாக இருத்தல்.

2. குறிக்கோள் (Mission)

விவசாயம் மற்றும் அதனோடிணைந்த துறைகளில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய சிறந்த பாட அறிவு மற்றும் பயிற்சி உடையடையவர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், அர்பணிப்புடையவர்கள் ஆகியவர்களை உருவாக்குவதன் மூலம் பட்டப்பின் கல்வி, ஆராய்ச்சி, மற்றும் அடைவுகளுக்கான ஒரு சிறந்த தேசிய மற்றும் பிராந்திய நிலையமாக திகழ்தல்.

3. பணிப்பாளரின் கூற்று / அறிக்கை

இது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு முகாமைத்துவ சபையின் ஆளுகையின் கீழ் செயற்படுகின்ற ஒரு நிறுவனமாகவும் இந்த நாட்டின் முதலாவது பட்டப்பின்படிப்பு கல்வி நிறுவன வகையாகவும் விவ.ப.பி.நி (PGIA) 1975 ஜூன் மாதத்தில் தாபிக்கப்பட்டது. பட்டப்பின்படிப்பு கல்விக்கான நாட்டின் திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாட்டில் துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற விவசாயத்துறைக்கு பொருத்தமான பயிற்றுவிக்கப்பட்ட விஞ்ஞான ஆளனியினை வழங்குதல் ஆகியன விவ.ப.பி.நி இனை உருவாக்கியதன் பிரதான நோக்கமாக இருக்கின்றது. ஒரு கால் நூற்றாண்டிற்கும் மேலாக இந்த தேசிய தேவைகளுக்காக இது சேவையாற்றி வருகின்றது. மேலும் இந்த நாட்டிலும் பிராந்தியத்திலும் பட்டப்பின் படிப்புகளுக்கான மிகச்சிறந்த நிலையமாக மிளிர்கின்றது.

பேராசிரியர் ஏ.எல்.ரி. பெரேரா அவர்கள் விவபபிநி இன் பணிப்பாளராக தமது 5 வருட காலத்தினை நிறைவு செய்த பின் 2011 ஒக் 21 இல் ஓய்வு பெற்றார். பேராசிரியர் பெரேரா பணிப்பாளராக அவரின் காலப்பகுதியில் பல்வேறு செயற்பாடுகளை ஆரம்பித்து நிறுவகத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்து இருக்கின்றார்.

விவசாய பீடத்தின் பயிர் விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர் கொலின் என். பீரிஸ் அவர்கள் 2011 ஒக் 23 இலிருந்து அமுலுக்குவருமாறு விவபபிநி இன் 7வது பணிப்பாளராக பதவியேற்றார். பேராசிரியர் பீரிஸ் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (விவசாய) விஞ்ஞான இளமானியையும், பென். ஸ்டேட் பல்கலைக்கழகத்திலிருந்து விஞ் முதுமானி மற்றும் கலாநிதி பட்டங்களை பெற்றுள்ளார். பேராசிரியர் பீரிஸ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர நிறுனய மற்றும் சான்றிதழ் சபையின் பிரதி பணிப்பாளராகவும் சேவையாற்றி இருக்கின்றார்.

கடந்த 36 வருட காலப் பகுதியில் நிறுவகத்தில் கற்கின்ற மாணவர்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. 2011/12 இல் மொத்தமாக 411 மாணவர்கள் பல கற்கை நிகழ்சித்திட்டங்களில் கற்றுவருகின்றனர். அவற்றுள் 320 மாணவர்கள் விஞ் முதுமானி கற்கைகளுக்காகவும், 29 வியா.நி.மு இற்காகவும், 24 தத்.முதுமானிக்காகவும், மற்றும் 15 கலாநிதி பட்டங்களுக்காகவும் மேலும் 12 பிரயோக புள்ளிவிபரவியலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா இற்காகவும் பதிவு செய்திருந்தனர். இவற்றுக்கு மேலாக 11 மாணவர்கள் தற்காலிக அடிப்படையில் பதிவு செய்திருந்தனர்.

2011 ம் ஆண்டு காலப்பகுதியில், 235 மாணவர்கள் தமது பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்களை நிறைவு செய்தனர். அவற்றுள் 153 விஞ்.முது, 28 வியா.நி.மு, 14 தத்.முது., மற்றும் 02 கலாநிதி பட்டங்கள், 38 பட்ட பின்படிப்பு டிப்ளோமாவும் கூட வழங்கப்பட்டன.

விவபபிநி இன் மாணவ சனத்தொகை பெரும்பாலும் மிருகவைத்திய மிருக விஞ்ஞானம், கலை, விஞ்ஞானம், மருத்துவம் போன்ற சகல வெவ்வேறு பீடங்களில் இருந்தும் அதேபோல் வெளிநாடுகளில் இருந்தும் உள்ளடக்கியிருந்தது. பங்காளதேஷ், இந்தியா, சீனக் குடியரசு, நேபாளம், மியன்மார், மற்றும் ஓமான் ஆகிய நாடுகளின் மாணவர்கள் ஏற்கனவே தமது பட்டபின்படிப்புக்களை விவபபிநி இல் நிறைவு செய்துள்ளனர்.

2011 இன் 23 வது வருடாந்த காங்கிரஸ் நவம்பர் 17-18 இல் நடைபெற்றது. விவசாய உயிரியல் கற்கை அவையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஆர்.பீ. கருனாகொட ஒருங்கமைப்பாளராக இருந்தார். இலங்கை மற்றும் இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான், நேபாளம் போன்ற ஏனைய நாடுகளிலும் இடம் பெற்ற பட்டப்பின்படிப்பு கற்கைளின் அடிப்படையில் இவ்வருடம் அறுபது விஞ்ஞான கட்டுரைகள் கிடைக்கப்பெற்றன. மீள்பார்வையாளர்களின் கடுமையான மதிப்பீட்டிற்கு பின்னர் ஏழு குறிப்பிட்ட ஆய்வு பொருள் சார்ந்த வாய்மொழி மூல சமர்பனங்களும் 12 சுவரொட்டி சமர்பனங்களுமாக 31 தெரிவு செய்யப்பட்டது. 2011 இல் விருது வென்றோர் விபரம் பின்வருமாறு:

முழு மொத்தமாக சிறந்த ஆராய்சிக் கட்டுரை - திரு S.M.R சமரகோன்.

<u>அமர்வுகளின் சிறந்த ஆராய்சிக் கட்டுரை</u>	<u>விருது வென்றோர்</u>
I. உயிரிரசாயனம் மற்றும் உணவு விஞ்ஞானம்	திரு J.D கொட்டாவ ஆராச்சி
II. மிருக விஞ்ஞானம் மற்றும் மீன்வளர்ப்பு	திரு. S.M.R. சமரகோன்

III. மண், நீர், மற்றும் இடம் சார் தரவு முகாமை — திருமதி A. சுதர்சினி
IV. மூலக்கூறு உயிரியல் மற்றும் மரபணு கையாளுதல் — திரு. H.D.D. பன்டுபிரிய
V. விவசாய பெருளியல் மற்றும் விரிவாக்கம் — திரு. M.A.C.S.S. பெனான்டோ
VI. பூந்தோட் செய்கை மற்றும் தாவர முறைமை — திருமதி. D.P. கருனாநந்த
VII. தாவர பாதுகாப்பு மற்றும் பயிரியல் — திரு. M. ஞானகுமார்
VIII. சுவரொட்டி சமர்பனம் — திருமதி. R.M.N.S. சுகதபால

கலாநிதி A.W.R ஜோகிம் ஞாபகார்த்த விருது
(அதிகபட்ச GPA 4.00 பெற்ற 02 விஞ்முது யினை தொடர்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டது)

1. திருமதி.. A.M.K.C.K. அபேகோன் பயிர் விஞ்ஞான கற்கை அவை
2. திருமதி.. E.A.G.S. அமரவன்ச மண் விஞ்ஞான கற்கை அவை

புதிய நிகழ்சிகளையும் கற்கைகளையும் அறிமுகம் செய்கின்ற அதேவேளை நடைமுறையில் உள்ள நிகழ்சிகளையும் கற்கைகளையும் தரமுயர்த்தல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஆசிரியர் குழாம் பரந்த அளவிலான கற்பித்தல் மற்றும் ஆராய்சி அனுபவத்தினைக் கொண்ட 300 க்கும் அதிகமான கல்வியாளர்களைக் கொண்டுள்ளது, பெரும்பாலானவர்கள் விவசாய பீடத்திலிருந்தும் ஏனையவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் ஏனைய பீடங்களில் இருந்தும், ஏனைய பல்கலைக்கழகங்கள், அரசாங்க திணைக்களங்கள், ஆராய்சி நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள், ஆகியவற்றைந் சார்ந்த போதனாசரியர்களையும் இந் நிலையம் உள்வாங்கிக் கொள்கின்றது.

‘தரம்’ விவபபிநி இன் எதிர்கால அபிவிருத்தியன் முக்கிய வார்தையாக இருக்கும். இது நம் நாட்டு மக்களின் நலனுக்காக எமது வளமான பல்லுயிர் மற்றும் முகாமை அனுபவத்துடன் எமது பாரம்பரிய விவசாய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதுடன் புதிய தொழில்நுட்பங்களை இணைத்து செயன்முறை அனுபவம், நவீன அறிவு மற்றும் வெளிக்காட்டுதல் ஆகியவற்றிலான பட்டதாரிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு இது உதவும். மேலும் தரம் நோக்கத்தின் புறநிலைப் பின்பற்றுதலில் இந்த நிறுவனம் உள்ளூர் பிராந்திய மற்றும் சர்வதேச தொழில் துறைகளுடன் அதன் தற்போதைய இணைப்பினை வலுப்படுத்துதலும் தொழில் துறையுடன் புதிய தொழில் பங்குடமை வடிவம், பாடவிதான தரமுயர்த்தல் மற்றும் தொடர்சியாக மீளமைத்தல் என்பவற்றை இந்த விவபபிநி மேற்கொள்ளும். தொழில் துறை பயிற்ச்சி புதிய பாடவிதானத்தின் பகுதியாக இருக்கும். இந்த கற்கைகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயனுடையதாகவும் தொழில் துறைக்கு மிகவும் பொருத்தமானதுமான பட்டதாரிகளை தயாரிப்பதிலும் பிச்சினை தீர்வுகள் மற்றும் இயற்கையில் மிகவும் பங்கபற்றுவதாகவும் ஏற்படுத்தப்படும்.

விவபபிநி எதிர் கொள்கின்ற ஒரு முக்கியமான சவாலாக தமது ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றில் கணிசமான அளவு நேரத்தை செலவிடல் மற்றும் தொடர்புடைய துறைகளில் பரந்த சாத்தியமான தேடுதல்களையுடைய ஒழுக்கமான அர்பணிப்பு மற்றும் கடின வேலைகளையுடைய மாணவர்களை உருவாக்குவதாகும். இவ்வாறான அர்பணிப்பு மூலம் இந்நிறுவகத்தின் பட்டதாரிகள் ஒரு உறுதியான வேலை நன்நெறியினை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்கப்படுகின்றது, இது அவர்களின் குணாம்சங்கின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கவேண்டும்.

ஒரு பொறுப்பான கடினமாக உழைக்கும் பீட மற்றும் மாணவர்கள், நிறுவகம், கல்வியாளர்கள் மற்றும் மாணவ ஒழக்கங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்கான நன்நடத்தை மற்றும் நடைமுறைக் கோவை இனால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். 21 ம் நூற்றாண்டின் விவபபிநி இன் பிரதான நோக்கமாக விரிவுரை அட்டவணைகளின் கடுமையான அவதானிப்பு, பரீட்சைத் திகதிகள், பரீட்சை முடிவுகளின் முதன்மை வெளியிடுதல் ஆகியனவாக இருக்கும். அர்பணிப்புள்ள கடுமையாக வேலைசெய்கின்ற பீடம் மற்றும் மாணவர்களை அபிவிருத்தி செய்தல் விவபபிநி இன் முதன்மை நோக்கமாக இருக்கின்றது.

பேராசிரியர் கொலின் என். பீரிஸ்
பணிப்பாளர் - விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்

4. வளங்கள் & மாணவர்கள்

நிறுவகம்	கற்கை	மொத்த மாணவர்கள் (2011)	மொத்த கல்வி அலுவலர்	மொத்த கல்வி சாரா அலுவலர்
விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்	ப. பி. டிப்ளோமா	12	02 நிரந்தர அலுவலர், 01 ஒப்பந்த அடிப்படையில் மற்றும் 300 வருகை அலுவலர்	38
	விஞ். முது	320		
	வி. நி. முது	29		
	தத். முது	24		
	தத். கலாநிதி	15		
		11		
மொத்தம்		**411**		

5. உள்நாட்டு மாணவர்கள்

நிறுவகம்	கற்கை	ஊடகம்	உள்வாங்கல் 2011	1ம் வருட மாணவர்கள்	2ம் வருட மாணவர்கள்	3ம் வருட மாணவர்கள்	4ம் வருட மாணவர்கள்	பட்டம் பெற்றோர் எண்.
விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்	ப. பி. டிப்ளோமா	ஆங்கிலம்	12					38
	விஞ். முது		320					153
	வி. நி. முது		29					28
	தத். முது		24					14
	தத். கலாநிதி		13					02
			11					
மொத்தம்			**409**					**235**

6. வெளிநாட்டு மாணவர்கள்

நிறுவகம்	கற்கை	ஊடகம்	உள்வாங்கல் 2011	1ம் வருட மாணவர்கள்	2ம் வருட மாணவர்கள்	3ம் வருட மாணவர்கள்	4ம் வருட மாணவர்கள்	பட்டம் பெற்றோர் எண்.
விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்	ப. பி. டிப்ளோமா	ஆங்கிலம்						
	விஞ். முது							
	வி. நி. முது							
	தத். முது							
	தத். கலாநிதி		02					
மொத்தம்			**02**					

7. கல்வி அலுவலர்

நிறுவகம்	விடயம்	ஊடகம்	சிரேஷ்ட பேராசிரியர்.	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	விரிவுரையாளர்	உதவி விரிவுரையாளர்	போதகர்கள்
விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம	பணிப்பாளர்	ஆங்கிலம்	01					
	சிரேஷ்ட உதவி நூலகர்						01	
மொத்தம்			**01**				**01**	

8. கல்வி சாரா அலுவலர்

கிளை	மிக சிரேஷ்ட அலுவலர்	சிரேஷ்ட அலுவலர்	கனிஷ்ட அலுவலர்	சிற்றூழியர்கள்
நிருவாகம்	02	02	04	10
கணக்குகள்	01	-	04	01
அனுமதி	01	01	05	01
கணினி அலகு	-	-	01	-
காங்கிரஸ் அலகு	-	-	02	03
விவ. ப. பி. நி நூலகம்	01	02	01	01
மொத்தம்	**05**[1]	**05**[2]	**17**[3]	**16**[4]

1 - நிருவாக மட்டம் & Executive Level

2 - சிரேஷ்ட அலுவலர் தரங்கள்

3 - எழுதுவினைஞர் & இணைந்த தரங்கள்

4 - மேலுள்ள தரங்களுக்கு கீழான

9. ஆராய்ச்சி, முனைவுகள் மற்றும் வெளியீடுகள்

விடயம்	வெளியிடப்பட்டவை	வர்த்தகமயமாகியவை	சமர்பிக்கப்பட்டவை
அ. ஆராய்சியாளர்களின் எண்.	16		16
ஆ. முனைஞர்களின் எண்.			
இ. சஞ்சிகைகளின் எண்.	04	04	
ஈ. புத்தகங்களின் எண்.	03	03	
உ. கட்டுரைகளின் எண்.			
ஊ. ஏனையவை			
மொத்தம்	**23**	**07**	**16**

10. நிகழ்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்

விடயம்	கலந்து கொண்டவை	நிறைவு செய்யப்பட்டவை	சமர்பிக்கப்பட்டவை
அ. ப.பி. பட்ட நிகழ்ச்சிகளின் எண்.			29
ஆ. ப.பி. டிப்ளோமா நிகழ்ச்சிகளின் எண்.			01
இ. பட்ட நிகழ்ச்சிகளின் எண்.			-
ஈ. டிப்ளோமா நிகழ்ச்சிகளின் எண்.			-
உ. சான்றிதழ் நிகழ்ச்சிகளின் எண்.			-
ஊ. ஏனையவை – ஆராய்ச்சி கருத்தரங்குகள் கருத்தரங்குகள் பயிற்ச்சிப்பட்டறைகள் குறுங் கற்கைகள்			15 01
மொத்தம்			**46**

11. பெறப்பட்ட பரிசில்கள்

விடயம்	பரிசில்களின் எண்.	கல்வியாளர்களின் எண்.	மாணவர்களின் எண்.
அ. உள்ளூார் பரிசில்கள்	01		02
ஆ. தேசிய பரிசில்கள்	09		08
இ. சர்வதேச பரிசில்கள்			
ஈ. ஏனையவை			
மொத்தம்	**10**		**10**

12. தொடங்கப்பட்ட புதிய கற்கைகள்

நிறுவகம்	கற்கைகள்	ஊடகம்	சான்றிதழ்	டிப்ளோமா	ப.பி. டிப்ளோமா	முதுமானி	தத் முது	தத் கலாநிதி
விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்								
மொத்தம்								

13. மீளெழும் செலவுகள்

விடயம்	2010 ரூபா.	2011 ரூபா.
அ. தனிப்பட்ட ஊதியம்	32,475,048	32,281,916
ஆ. போக்குவரத்து	131,134	86,548
இ. வழங்கல்கள்	2,412,585	2,130,967
ஈ. பராமரிப்பு	703,340	713,751
உ. ஒப்பந்தகார சேவைகள்	5,001,964	4,840,840
ஊ. ஏனையவைகள்	11,309,466	12,240,319
மொத்தம்	**52,033,537**	**52,294,341**

14. முலதன செலவுகள்

விடயம்	2010 ரூபா.	2011 ரூபா.
அ. அலுவலக உபகரனங்களினதும் தளபாடங்களினதும் பெறுகைகள்	2,147,057	70,826
ஆ. இயந்திரங்களின் பெறுகைகள்		
இ. கட்மைப்பும் கட்டடங்களினதும் பெறுகைகள்	609,096	-
ஈ. ஏனையவைகள்		325,087
மொத்தம்	**2,756,153**	**395,913**

15. கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

விவரங்களின் பெயர்	கடன் / மானியம்	நிதியிடல் முகவர்	TEC ரூபா.	RFA ரூபா.	DF ரூபா.
கெப்நெட் CAPNET	மானியம்	CAPNET தன்ஆபிரிக்கா	934,700		
எல்கைளைக் கடந்த கருத்திட்டம்	மானியம்	DGIS நெதர்லாந்து	75,035,938		
மொத்தம்	-	-	**75,970,638**	-	-

16. கருத்திட்ட செலவுகள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

பெயர்	TEC ரூபா.	2009 இல் செலவு ரூபா.	2010 இல் செலவு ரூபா.	31.12.2011இல் உள்ளவாறான சேர்ந்த செலவு ரூபா	உண்மையான முன்னேற்றம் %
கெப்நெட் CAPNET	934,700	654,306	2,266,312	2,920,618	100%
எல்கைளைக் கடந்த கருத்திட்டம்	75,035,938	18,144,865	12,314,322	30,459,187	80%
மொத்தம்	**75,970,638**	**18,799,171**	**14,580,634**	**33,379,805**	**180%**

17. நிதி முன்னேற்றங்கள் (செலவுகள்)

விடயம்	2011 இல் ஏற்பாடு ரூபா	2011 இல் செலவு ரூபா	சேமிப்பு/மேலதிகம் ரூபா
அ. கருத்திட்டம் தவிர்ந்த மீளெழுந்தவை	69,358,000	52,294,341	17,063,659
ஆ. கருத்திட்டம் தவிர்ந்த மூலதனம்	2,000,000	395,913	1,604,087
இ. கருத்திட்டம் - உள்நாட்டு நிதியிடல்		790,283	(790,283)
ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடல்	107,525	14,580,634	(14,473,109)
மொத்தம்	**71,465,525**	**68,061,171**	**3,404,354**

18. நிதி முன்னேற்றங்கள் (உருவாக்கிய வருமானம்)

வருமானத்தின் மூலம்	2011 இல் ஏற்பாடு ரூபா	2011 இல் சேர்ப்பனவு ரூபா	குறை/மிகை ரூபா
அ. பட்டப் படிப்புகள்			
ஆ. பட்டப்பின் படிப்புகள்	58,186,000	48,287,970	(9,898,030)
இ. ஆலோசனைகள்			
ஈ. ஏனையவைகள்			
மொத்தம்	**58,186,000**	**48,287,970**	**(9,898,030)**

19. நிதியியல் விளைவுப் பகுப்பாய்வு - 2011

விடயம்	சூத்திரம்	ஒரு மாணவருக்கான செலவு ரூபா
அ. ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு (RE)	RE/உறுதியான மாணவர்களின் எண்.	147,724
ஆ. ஒரு மாணவருக்கான மூலதன செலவு (CE)	CE/ உறுதியான மாணவர்களின் எண்.	428
மொத்தம்	-	**148,152**

20. கிடைக்கப்பெற்ற அடிப்படை வசதிகள் - 2011

அடிப்படை கட்டமைப்பு விபரம்	செலவுகள் ரூபா	உண்மையான முன்னேற்றம்
இல்லை		

21. ஏனைய விபரங்கள் / இவ்வறிக்கையுடன் தொடர்பான விளைவுகள்

இல்லை

Postgraduate Institute of Agriculture
- 4 JUL 2013
PERADENIYA
University of Peradeniya

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } සිඑල්/කේඩි/ජේ/ පීජ්අයිඒ/2012/28	ඔබේ අංකය / உமது இல / Your No. }	දිනය / திகதி / Date } 2013 ජුනි 28 දින.

අධ්‍යක්ෂ,
කෘෂිකර්ම විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය

කෘෂිකර්ම විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනයේ 2011 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108 වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

සමාංක සහ 2013 ජනවාරි 21 දිනැති මාගේ ලිපියට යොමු වේ.
ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.ඒ.එස්. සමරවීර.
විගණකාධිපති.

පිටපත් :-
1. ලේකම් - උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
3. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
4. උපකුලපති - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 / 034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. சீஎல்/கேடி/ஜே/பிஜிஐஏ/2012/28

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2013 சனவரி 21

பணிப்பாளர்,

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1979 திசெம்பர் 26 ஆம் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவு மற்றும் III ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவனப் பணிப்பாளருக்கு 2012 ஆகஸ்ட் 22 ஆம் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව

இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை

No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 / 034

ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223

ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதுள்ளேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.1, 2.2.2 மற்றும் 2.2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நிர்ணயிக்க என்னால் முடியாதுள்ளேன்.

2 நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2.1, 2.2.2 மற்றும் 2.2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமம்

இலங்கை கணக்கீட்டுக் நியமம் 05 இற்கு முரணாக களஞ்சிய இருப்பு உருப்படிகளின் கீழ் எடுக்கப்படாத பெறுமதி ரூபா 777,777 ஆன 1,682 புத்தகங்கள் மற்றும் நூல்கள் முறையற்ற விதத்தில் இருப்பின் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 771,683 பெறுமதியான 115 நூல்கள் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வெளிநாட்டு மாணவர் ஒருவருக்காக அவரின் கல்விச் செலவினத்தை தீர்வு செய்வதற்காக நிறுவனத்தினால் செலவிடப்பட்ட ரூபா 97,276 செலவினம் மீளாய்வாண்டில் மீள்நிரப்பப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி உரிய செலவினக் கணக்குகளுக்கு இணக்கம் செய்யப்படாமல் பொது ஒதுக்கக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஒக்தோபர் 20 ஆம் திகதி தாய்லாந்தில் நடாத்தப்பட்ட மாநாடொன்றில் பங்குபற்றுவதற்காக வெளிநாடு சென்ற 05 மாணவிகளுக்கான பிரயாணச் செலவினம் மீள்நிரப்பலாக ரூபா 131,775 செலுத்தப்பட்டிருந்ததுடன், அச்செலவினத்தை ஆண்டின் செலவினமாக கருதி கல்வி ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் கணக்கிற்கு முறையற்ற விதத்தில் வரவு வைத்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த மின் அத்தியட்சகர் ஒருவர் நிறுவகத்தில் சேவை புரிந்தமைக்காக 2010 ஏப்ரல் முதல் 2011 யூன் வரையான காலப்பகுதிக்கு ரூபா 14,000 கட்டணத்தை தனிப்பட்ட விசேட சேவைக் கணக்கிற்கு வரவு வைத்து செலுத்தப்பட்டிருந்தது. அதில் அடங்கியுள்ள 2010 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 9,000 செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் அப்பெறுமானத்தால் செலவினம் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் முதல் 2012 யூலை வரையான காலப்பகுதிக்குரிய நிழற்பட பிரதி இயந்திரத்திற்கான வருடாந்த சேவை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக ரூபா 31,740 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்வரும் ஆண்டிற்குரிய ரூபா 18,515 செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றில் ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளுக்காக அவ்வாண்டிற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அதற்காக செலவிடப்பட்ட ரூபா 12,000 ஆன செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2010 பெப்ரவரி 09 ஆம் திகதி தலைமைக் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 6,000 பெறுமதியான டோனரிற்கான செலவினம் ஆண்டின் செலவினமாக முறையற்ற விதத்தில் இரசாயன வழங்கல்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 66,380 செலவு செய்யப்பட்டு 12 சீலிங் மின்விசிறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஏனைய வழங்கல்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) ருஹுனு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவருக்கு முன்னைய ஆண்டில் 03 நாட்களில் நடாத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றிற்காக, மீளாய்வாண்டின் போது ரூபா 60,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகை ஆண்டின் செலவினமாக கருத்தரங்குகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2010 திசெம்பர் மாதத்திற்கு உரித்தாக பேராசிரியர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 25,452 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் சம்பள செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது

(ஐ) முன்னைய ஆண்டில் வெளியார் விரிவுரைக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு ரூபா 1,117,550 ஆக இருந்த போதும் அதற்காக மீளாய்வாண்டில் செய்யப்பட்ட செலவினம் ரூபா 3,985,475 ஆக இருந்ததுடன், மீதி வெளியார் கட்டணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தால் விரிவுரைக் கட்டண செலவினம் ரூபா 2,867,925 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது

(ஒ) பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் பேணப்படுகின்ற பதிவேட்டின் பிரகாரம் நிறுவகத்தினால் பயன்படுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரக் கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய செலவினம் ரூபா 442,012 ஆக இருந்த போதும் அதற்குரிய கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 287,128 ஆக இருந்தமையால் ரூபா 154,884 ஆன செலவினமொன்று குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்கு விடயங்கள்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
நிலையான சொத்துக்கள்	121,319,780	நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள்
நூலகப் புத்தகங்கள்	33,387,254	பொருள் மெய்மையாய்வு அறிக்கை
	154,707,034	

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள்	இணங்காமை
(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு	மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனச் செலவின மதிப்பீடு, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை என்பன வருடாந்த பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

(i) நி.பி 188

பேராதனை இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் 2003 முதல் 2010 யூலை வரையான காலப்பகுதிக்குள் வைப்புச் செய்யப்பட்டு ஆனால் தீர்வையாகாத ரூபா 10,230 பெறுமதியான 06 காசோலைகள் மற்றும் பேராதனை மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கின் 2011 திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தீர்வையாகாத ரூபா 7,440 பெறுமதியான 02 காசோலைகள் மற்றும் 15 காசுக் கட்டளை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

ii நி.பி 371

i விரிவுரையாளர் ஒருவருக்கு 2011 பெப்ரவரி 28 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 10,000 முற்பணத் தொகை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 03 மாதங்களின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

துணைக்கட்டுநிதி பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே வழங்கப்பட முடியுமான போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 13,870 ஆன பணத்தை பட்டப்பின் படிப்பு பாடநெறியைப் பின்பற்றும் மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

iii. நி.பி 371(5)

துணைக்கட்டுநிதி குறித்த செயற்பாட்டிற்கு மட்டுமே வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 221,092 ஆன 02 முற்பணங்கள் ஆண்டின் இறுதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

iv. நி.பி 571	2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது உரிய நடைமுறையை பின்பற்றி தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 118,003 பெறுமதியான ஒப்பந்த வைப்புக்கள் அதன் பிரகாரம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
v. நி.பி 880	அரச நிதி, வருமானங்கள், சொத்துக்களுக்கு பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள் உட்பட உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப் படுத்துகின்ற காசோலைகளில் கையொப்பமிடு கின்றவர்களால் போதியளவில் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும், பணிப்பாளர், உதவிப் பதிவாளர், சிரேஷ்ட நிதியாளர், பணத்தை சேகரிப்பவர்,களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோரிடமிருந்து அவ்வாறு பிணைப் பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	கணனி இயந்திரங்களுக்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை.
(ஈ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவை	
IX ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பந்தி	மாதாந்த மேலதிக நேரக் கொடுப்பனவு மாதாந்த திரட்டிய சம்பளத்தின் 35% இனை விட மேற்படக் கூடாத போதும் அதற்கு முரணாக அந்த எல்லையை மிகைத்து 13 ஊழியர்களுக்கு 49 சந்தர்ப்பங்களின் போது ரூபா 87,397 செலுத்தப்பட்டிருந்தன.

(உ)	2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயத்தின் சுற்றறிக்கை	
	i. 7.4.5 ஆம் பந்தி	நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.
	ii. 8.3.5 ஆம் பந்தி	பணிப்பாளருக்கான பெற்றோல் வாகனமொன்றிற்காக மாதாந்த எரிபொருள் எல்லை 180 லீற்றர் ஆக இருந்த போதும் 03 மாதங்களில் அந்த எல்லையை விஞ்சி 168 லீற்றர் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.
	iii. 8.8 ஆம் பந்தி	முகாமைச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று பதவியணிக்கு அதிகாரங்களை பகிர்ந்து அளிக்கக்கூடியதாக இருந்த போதும் 47 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களில் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனையொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்திடம் காணப்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு பரிசோதனை நடாத்தப்படாமையால் வெவ்வேறு அளவுகள் இடப்பட்டு எரிபொருள் சீர்செய்யப்பட்டிருந்தது.
(எ)	விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகக் கட்டளை விதிக்கோவையின் 18 ஆம் பந்தியின் பிரகாரம்	நிறுவக உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாதிருந்த போதும் மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 34,000 அவ்வாறான நடவடிக்கை ஒன்றிற்காக செலவிடப்பட்டிருந்தது.

3 நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற் கொள்வதற்கு முன்னர் ரூபா 5,369,318 பற்றாக்குறையாக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 22,585,072 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கில் எடுத்துக் கொண்டதன் பின்னர் இப்பற்றாக்குறை ரூபா 17,215,754 ஆன மிகையாக மாறியிருந்தது. முன்னைய ஆண்டிற்காக மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னர் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,770,860 ஆக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 18,000,000 தொகையான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்ததன் பின்னர் இப்பற்றாக்குறை ரூபா 19,770,860 ஆன மிகையொன்றாக அதிகரித்திருந்தது.

3.2 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/774/11 (பி) ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் படி இரண்டாம் மூன்றாம் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவாக 1996 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,193,432 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூலை 18 ஆம் திகதிய பீடி/ஐ/என்எஸ்/டிஎல்/ஜீஎஸ்/ஏ078 இலக்கமுடைய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்புத் தொகையைக் கணக்கிடும் போது கல்விசார் கொடுப்பனவை கருத்திற்கொள்ளக் கூடாத போதிலும், அதற்கு முரணாக கணக்கிடப்பட்ட காரணத்தினால் 2001 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 2,724,475 தொகையான கல்விசார் கொடுப்பனவிற்காக ரூபா 490,403 பங்களிப்புத் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2003 நவம்பர் 29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையை மிகைத்து 2004 நவம்பர் 24 ஆம் திகதிய மேற்கொள்ளப்பட்டிருந்த முகாமைச் சபைத் தீர்மான இலக்கம் 150.2.1 இன் பிரகாரம் வெளிவாரி விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டில் பெறுபேறுகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்காக 10% வீதப்படி ஆன ரூபா 156,375 உபகாரப் படி செலுத்தப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பட்டப்பின் படிப்பு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 1,255 பேராக இருந்ததுடன், அதற்காக ஆண்டில் ஏற்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 41,669 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அப்பெறுமதி ரூபா 31,402 ஆகவும் இருந்தது.

(ஆ) ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதே நிறுவகத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதும் கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் உள்ளக ஆய்வு நடவடிக்கைகளுக்காக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாத அந்த 07 ஆய்வுகளில் பங்குபற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 21 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் ரூபா 15,298,947 பெறுமதியான 07 வெளியக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக ரூபா 1,780,695 செலவிடப்பட்டு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த செயலமர்வு மூலம் வெளியிடப்பட்ட ஆய்வுகள் வெளியக ஆய்வுகளின் பெறுபேறுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

4.2 நிதியத்தின் குறைப் பயன்பாடு

ஆய்வு நடவடிக்கைகளுக்காக பணம் ஒதுக்கீடு செய்யப்படாதிருக்கையில் ஆண்டின் போது 07 வெளியக ஆய்வுகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2004 முதல் 2011 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 1,008,769 ஆன 07 ஆய்வுகள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் காணப்பட்டன.

4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 09 கணனி மேசைகள் மற்றும் 28 கணனி உப பாகங்கள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கங்களைச் செய்யவோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 முதல் 2008 வரை கொள்வனவு செய்யப்பட்ட மாணவர் கைநூல்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 123,264 பெறுமதியான 1,200 புத்தகங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(இ) ரூபா 49,000 செலவு செய்யப்பட்டு கணனி மென்பொருளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 யூன் மாதம் வரையில் அந்த மென்பொருள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகக் கட்டளைகளின் பிரகாரம் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கீழ் எந்த வகையான நிலையமொன்றையும் தாபிப்பதற்காக ஏற்பாடுகள் மெற்கொள்ளப்பட்டிருக்காத போதும், முகாமைச் சபையின் அங்கீகாரமின்றி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 02 விரிவுரையாளர்களையும் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளராக ஒருவரையும் சேர்த்து 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரை அவர்களுக்கு ரூபா 1,608,000 கொடுப்பனவு செய்து செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேசிய விவசாய சேதனப் பசளை நிலையம் (NCOA) மற்றும் வலுவினை உற்பத்தி செய்யும் நிலையம் (CRES) என்ற பெயரில் 02 நிலையங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த 02 நிலையங்களும் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை. மேலும் இந்த நிலையங்களுக்கு 03 ஆண்டுகளுக்கு முன்னர் மதியுரைக் கட்டணம், வளவாளர் படிகள், செயலமர்வுகள் மற்றும் இணையதளமொன்றை ஆரம்பித்தல் போன்ற விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,867,220 மானியங்களைப் பயன்படுத்தி உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேதனப் பசளை விவசாயப் பண்ணை மாதிரியொன்றை தயாரிப்பதற்காக ரூபா 1,800,000 மதிப்பிடப்பட்ட பெறுமதி அடிப்படையில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரமின்றி 2009 ஒக்தோபர் மாதம் வரையில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 300,000 பணம் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அச்செயற்பாடு 2012 யூன் மாதம் வரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 செப்தம்பர் 27 ஆம் திகதி இளைப்பாறியிருந்த பீடத்திற்குரிய நூலககத்தின் ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடைக் கொடுப்பனவு தாமதத்தின் காரணமாக ரூபா 33,635 ஆன மிகை அறவீடொன்று 2011 யூன் 18 ஆம் திகதிய நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உதவி தொழில் ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், நி.பி 119 இன் பிரகாரம் மிகை அறவீட்டை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முறையற்ற விதத்தில் ஓய்வூதிய பணிக்கொடை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் ஆராய்ச்சிச் செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கையின் இலக்கம் 7(iii) இன் பிரகாரம், செயற்திட்டத்திற்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நிலையான சொத்துக்கள் நிறுவகத்திற்கு பொறுப்பளிக்கப்பட வேண்டிய போதிலும், ஆராய்ச்சி நடவடிக்கைகளை பூர்த்தி செய்த 04 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 1,415,374 ஆன நிலையான சொத்துக்கள் 2011 திசெம்பர் வரையிலும் நிறுவகத்திற்கு பொறுப்பேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.6 தாமதமான செயற்திட்டங்கள்

நிறுவனத்தின் கணனிப் பயிற்சி நிலையத்திற்கு உள்வரும் மாணவர்களை இனங்காணும் பொருட்டு பாதுகாப்பு முறையொன்றாக ரூபா 216,092 செலவில் அடையாள முறைமையொன்று தாபிக்கப்பட்டிருந்த போதும் அடையாள அட்டை தயாரித்தலில் தாமதம் காரணமாக கணக்காய்வு பரிசோதனைச் சந்தர்ப்பமான 2012 யூன் மாதம் வரையில் அச்செயற்பாடு நடைமுறைப்படுத்தும் நிலைமையில் காணப்படவில்லை.

4.7 பதவியணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்விசார் மற்றும் கல்விசாராப் பதவியணியில் வெற்றிடங்கள் 10 ஆக இருந்ததுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், நிறுவகத்தின் விரிவுரைகளுக்காக பகுதிநேர விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு, பகுதிநேர விரிவுரைக்கட்டணமாக மீளாய்வாண்டில் ரூபா 7,308,925 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வளப் பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.8 ஊழியர் பணிக்கொடைக்காக நிதிஏற்பாட்டிற்காக நிதியமொன்றைத் தாபித்தல்

ஊழியர் பணிக்கொடைகளை வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 8,069,831 நிதிஏற்பாட்டை செயற்திறனான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் காணப்பட்டது.

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 கல்விக் குழு

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டளையின் 14(7) உப பந்தியின் பிரகாரம் ஒவ்வோரு ஆண்டிலும் ஆகக்குறைந்தது 06 தடவைகளாவது கூட்டங்கள் நடாத்த வேண்டிய போதிலும், 03-05 இடைப்பட்ட கூட்டத் தொடர்கள் 11 நிறுவகக் குழுவினால் நடாத்தப்பட்டிருந்தன.

5.2 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 736,714 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரமும் கொள்வனவு கைநூலின் 4.2.1 பிரிவின் பிரகாரமும் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2 பிரிவின் பிரகாரம் கொள்வனவு நேரஅட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 08 வருமான விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானத்தை மிகைத்து சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 10,764,090 ஆக இருந்ததுடன், அதன் சதவீதம் 0.87% முதல் 575% சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 10 செலவின விடயங்களுக்குரிய ரூபா 13,798,118 கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை அடையப் பெறாமல் இருந்ததுடன், அதன் சதவீதம் 16% முதல் 88% வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டினை இயலுமான வரையில் சரியாகவும் முழுமையாகவும் தயாரித்துக் கொள்வது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், 30 செலவின விடயங்களுக்குரிய சேமிப்புக்கள் ரூபா 20,083,444 ஆக இருந்ததுடன், அதன் சதவீதம் 9% முதல் 98% வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஈ) 17 செலவின விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டை மிகைத்து செய்யப்பட்ட செலவினம் ரூபா 3,649,839 தொகையாக இருந்ததுடன், அதன் சதவீதம் 1% முதல் 159% வரையான வீச்சில் காணப்பட்டது.

5.4 ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 6.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆண்டறிக்கையில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் உள்ளடக்கப்படாமல் இருந்ததுடன், ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய மாணவர்கள் தகவல்களின் பிரகாரம் மாணவர் எண்ணிக்கை 3,903 ஆல் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்குரித்தாகத் தயாரிக்கப்பட்டிருந்த ஆண்டறிக்கையின் பிரகாரம் பயிர் உருவகப்படுத்தல் முறை தொடர்பான பாடநெறியும் பாவனையாளர் உணவுத் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற உணவு உற்பத்தி போன்ற பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதும் 2012 ஆம் ஆண்டு வரையில் அப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் பணிப்பாளருக்கு அவ்வப்போது எனது அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) முற்பணம்
(ஈ) கொள்வனவுகள்
(உ) ஆராய்ச்சி மற்றும் மானியங்கள் தொடர்பான நடவடிக்கைகள்
(ஊ) நூலகப் புத்தகங்களின் பாவனை
(எ) குறுகியகால பாடநெறிகளை நடாத்துதல்

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வு பதில்கள்

வினா இல : CL/KD/J/04/PGIA/2012/28

கோப்பு இல : உதவி கணக்காய்வாளர் நாயகம், அரசாங்க கணக்காய்வு கிளை

விடயம் : கணக்காய்வு அறிக்கை - 2011

21.03.2013 ம் திகதிடப்பட்டதும் மேலுள்ள இலக்கத்தைக் கொண்டதுமான கணக்காய்வு அறிக்கைக்குரிய பதில்களை இங்கு அனுப்புகின்றேன்.

2.

2.1.1 புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமதிகளாக கணக்காய்வு அறிக்கையில் ரூபா 777,777.00 காட்டப்பட்டுள்ளது. இது சரக்குப் பட்டியலில் எடுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் ரூபா 615,877.00 ஆக இது திருத்தப்பட வேண்டும். வருடாந்த சரக்கு பட்டியலில் இருந்து இந்த புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமதியினை நீக்குவதற்கும் வருடாந்த கணக்கறிக்கை 2012 இல் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ஒரு தனி வகையாக காட்டுவதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 777,683.00 இற்கு புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் எண்ணிக்கைப் பெறுமதி வியாபார நிருவாக முதமானி (வி.நி.மு) கற்கின்ற மாணவர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதியாக இருக்கின்றது. மேலும் மாணவர்களால் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றது. இது இறுதிக் கணக்குகள் - 2012 இல் சரியாக கணக்கிடப்பட்டுள்ளது.

2.1.2

(a) ஏற்கவில்லை. 114 ம் இல நாளேட்டுக்குரிய விவரணத்தின் கீழ் காட்டப்பட்டதற்கு அமைவான ஒரு தொகை 2010 ம் ஆண்டில் ஒரு வைப்பாக காட்டப்பட்டிருக்க வேண்டியவை தவறுதலாக இலாபமாக மாற்றப்பட்டிருந்தது திருத்தப்பட்டது. திரு ரி. அகமட் என்ற மாணவனுடைய வைப்பு மீதி பொது ஒதுக்க கணக்குக்கு செம்மையாக்கி இறுதிக் கணக்குகளில் சரியாக காட்டப்பட்டுள்ளது.

(b) மீளாய்வு வருடத்தில் செலவு என கடந்த வருடத்தில் தொடர்புடையதில் ரூபா 131,777.00 கண்க்கிட்டில் செலுத்தப்பட்டவை கணக்கீட்டு குறைபாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(c) இலத்திரனியல் பொறியியலாளருக்காக கொடுப்பனவு ரூபா 9,000.00 செலுத்தியமை மற்றும் நிழல் பிரதி இயந்திரம் ஒன்றுக்கான பராமரிப்பு ஒப்பந்தம் புதுப்பித்தமைக்கான கொடுப்பனவு ரூபா 31,740.00 செலுத்தியமை இவ்வருட மீளாய்வின் கீழ் செலவாக கணக்கிடப்பட்டிருந்தமை ஒரு கணக்கீட்டு குறைபாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(d) 2010 ம் ஆண்டுடன் தொடர்புடைய ஒரு கருத்திட்ட ஒருங்கமைப்பு கட்டணமான ரூபா 12,000.00 தொகையொன்று இவ்வருட மீளாய்வின் கீழ் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, இது ஒரு கணக்கீட்டு குறைபாடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(e) 2010 ம் ஆண்டில் பிரதான களஞ்சியத்தில் இருந்து பெறப்பட்ட டோனர்களின் கொடுப்பனவு ரூபா 6,000.00 இவ்வருட மீளாய்வின் கீழ் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, இது ஒரு கணக்கீட்டு குறைபாடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(f) நிலையான சொத்துக்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கூரை மின் விசிறிகள் தொடர்பாக ரூபா 66,380.00 கண்கிற்கு எடுத்துக் காள்வதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் 2012 இறுதிக்கணக்குகளில் கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து தேய்வுகள் வழங்கப்பட்டுள்ளது.

(g) கடந்த ஆண்டுடன் தொடர்புடைய ருகன பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள ஒரு ஒரு பேராசிரியருக்கு செலுத்தப்பட்ட ரூபா 60,000.00 கணக்கு இவ்வருட மீளாய்வின் கீழ் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, இது ஒரு கணக்கீட்டு குறைபாடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(h) டிசம்பர் 15 – 31, 2010 காலப்பகுதிக்காக ஒரு பேராசிரியருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 25,452.00 கணக்கீடு இவ்வருட மீளாய்வின் கீழ் ஒரு கணக்கீடு குறையாக இருக்கின்றது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(i) கடந்த ஆண்டுக்கான ரூபா 1,117,550.00 முன் ஏற்பாடு அதிகரித்தமையினால் வருகை விரிவுரையாளர் கொடுப்பனவு 2,867,925.00 கணக்கீடு பொது ஒதுக்கத்தினை செம்மைப்படுத்தாமல் இவ்வருட மீளாய்வின் கீழ் ஒரு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை ஒரு கணக்கீட்டு குறைபாடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2012 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கணக்கீட்டு குறைகளை திருத்துவதற்காக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்டு இருக்கின்றது.

(j) விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் பராமரிக்கப்படுகின்ற பதிவுகளுக்கு இணங்க பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு நீர் மற்றும் மின்சாரத்திற்கும் செலுத்த வேண்டிய தொகையான ரூபா 287,128.00 இறுதிக்கணக்குகளில் வழங்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் பல்கலைக்கழகத்தினால் ரூபா 442,012.00 பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக காட்டப்பட்டுள்ளது. ஆகவே பல்கலைக்கழக பதிவாளருக்கு சகல கொடுப்பனவு விபரங்களை வழங்குவதற்கும், கொடுபட வேண்டிய தொகையினை தீர்ப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.3. **நிலையான சொத்து பதிவேடு மற்றும் அட்டவணைகள்**

நிலையான சொத்துக்களின் விபரங்கள் நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கணனி மென்பொருளில் உள்ளீடு செய்யப்பட்டு இருக்கின்றதுடன் இது நிறைவு செய்வதற்கான இறுதிக்கட்டத்தில் தற்போதுள்ளது. மேலும் நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சகல நிலையான சொத்துக்களுக்கான களஞ்சிய பதிவுகளையும் நிருவாகத்தினால் பராமரிக்கப்பட்டுக் கொண்டு இருப்பதுடன் ஏனைய தொடர்புடைய கிளைகளும் கூட தேதிவரை புதுப்பிக்கப்பட்டும் இருக்கின்றன.

நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கான கணக்கொடுப்பு குழுவின் அறிக்கை

நூலகத்தின் சகல புத்தகங்களினதும் சஞ்சிகைகளினதும் விபரங்கள் பதிவேட்டிலும் கணனி மென்பொருளிலும் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் கணக்கொடுப்பு வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் தற்போது இது நிறைவு செய்வதற்கான இறுதிக் கட்டத்திலும் உள்ளது.

2.2.4

(a) வருடாந்த பாதீட்டினை தயாரிப்பதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவர்களின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களில் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதற்கு வேண்டியிருக்கவில்லை. ஆனால் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போல் வருடாந்த பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் பாதீடு செய்யப்பட்ட காசோட்டக் கூற்றுகள் தயாரிப்பதற்கு இதில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

(b) (i) தீர்கப்படாத காசோலைகளின் தொடர்புடைய வங்கிகளிடமிருந்து விளக்கங்களை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்து இருக்கின்றது. மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதியுடனும் நிதிக் குழவின் பரிந்துரையுடனும் நி. ஏ. 188 இன் ஏற்பாட்டுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

(ii) (i) ஒரு குப்பை நீக்கும் இடத்தின் ஒரு நிர்மானத்தின் சில மேலதிக வேலைகள் தொடர்பாக இந் நிறுவகத்தின் தத். முதுமானியினை தொடர்கின்ற ஒரு மாணவனின் மேற்பார்வையாளருக்கு இந்த முற்பணம் வழங்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் இவ் வேலைக்கான பிரதேசத்தில் காணப்பட்ட காலநிலை காரணமாக வேலை தொடங்கப்படாமல் இருந்ததுடன் முழுமையாக மீள தீர்கப்பட்டுள்ளது.

(ii) ஒரு மாணவனின் ஆராய்ச்சி செலவுகளுக்காக இந்த முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் ஏனைய வெளியார்களுக்கு அன்றி அலுவலக ஊழியர்களுக்கு மாத்திரம் முற்பணங்கள் வழங்குவதற்கு இது குறிக்கப்பட்டு இருக்கின்றது.

(iii) <u>திரு. D.N. ஜயசிங்க</u>

இஸ்தாபனக் கிளை மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக நிதியாளர் ஆகியோர்களுக்கு இந்த ஊழியரின் சேமிப்பு நிதி விடுவிக்கும் பொழுது இந்த முற்பண மீட்பு தகவலளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்தொகை மீட்புக்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை, இவ்விடயம் அடுத்த நிதிக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட இருக்கின்றது மேலும் அக்குழவின் தீர்மானத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

<u>E.W. வரையறுக்கப்பட்ட தகவல் முறைமைகள்</u>

ரூபா 216,092.00 பெறுமதியான முற்பண மீளதீர்பனவிற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

(iv) இந்த வைப்பாளர்களிடம் இருந்து உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் 2012 ம் ஆண்டில் ஒரு வைப்பாளரக்கு ரூபா 10,000.00 தொகையொன்று மீள வழங்கப்பட்டது. மேலும் மீதித்தொகையான ரூபா 108,003.00 நிதக் குழவின் பரிந்துரையுடனும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடனும் நிறுவகத்தின் பொது வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

(v) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள பமாஆ சுற்றறிக்கை இல 752 இற்கு அமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அல்லது திணைக்களத்தின் தலைவர் இவ்வாறான வைப்புகளை சமர்பித்து வேண்டுதல்களில் இருந்து அலுவலர்களை விடுவிக்க முடியும். (இணைப்பு-1)

மேலும் உயர்கல்வி நிறுவகங்களின் அலுவலர்களின் நியமனங்கள், மாற்றங்கள், பதவியுயர்வுகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ப்பட்டு இருக்கின்றன. மேலும் களஞ்சிய பொறுப்பாளரிடமிருந்து பெறப்பட்ட வைப்பிற்கு உரிய நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

(c) நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கணணி மென்பொருளில் இவ்விடயங்கள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் சகல நிலையான சொத்துக்களுக்குமான சரக்கு பதிவுகள் நிருவாகம் மற்றும் ஏனைய தொடர்புடைய கிளைகளில் தேதிவரையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(d) வாரநாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் இரவு 9 மணிவரையிலும் நிறுவகத்தின் பெரும்பாலான விரிவுரைகள் நடாத்தப்படுவதனால் கணணி ஆய்வுகூடம் மாணவ அனுமதி கிளை மற்றும் மாணவ பாவனைக்காக நூலகம் என்பனவற்றை திறந்து வைத்திருப்பது இதற்கு அவசியமானதாக இருக்கின்றது. மேலும் இச்சேவைகளுக்காக விசேட கட்டணங்கள் மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றன. இவ்வருட மீளாய்வின் கீழ் இவ்வாறான சேவைகளை வழங்கியமைக்காக பெறப்பட்ட வருமானங்கள் பின்ருமாறு தரப்படுகின்றன;

த.தொ. கட்டணம்	-	ரூபா. 2,078,051.00
பொருட்களுக்கான வாடகை	-	ரூபா. 452,250.00
நூலக கட்டணம்	-	ரூபா. 300,540.00

எவ்வாறாயினும் கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு மேலதிக நேர செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட இருக்கின்றன. மேலும் தாபன கோவையின் அத்தியாயம் ix, 8 ம் பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக பொருத்தமான அனுமதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றன.

(e) (i) 2012 ம் ஆண்டுக்கான பொருட்களஆய்வு சபை நடாத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது மேலும் இந்த அறிக்கை 2012 செப்டம்பர் 17 இல் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ii) இந்த வாகனம் பணிப்பாளரின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை மேலும் இவ்வருட காலப்பகுதியில் இது மாணவர்களின் செயற்பாடுகள் மற்றும் நிறுவகத்தின் ஏனைய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் 2012 ஜனவரி மாத காலத்திற்காக வழங்கப்பட்டுள்ள எரிபொருள் தொகையாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை 75 லிட்டர்கள் என திருத்தப்பட்டிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் 2012 ஒக்தோபரில் இருந்து இந்த வாகனம் பணிப்பாளரின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. மேலும் பமாஆ வின் சுற்றறிக்கை இல 2/2011 இற்கு அமைவாக படிக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றன.

(iii) ஜனவரி 2013 இல் இருந்து நிறுவகத்தின் அலுவலர்களுக்கு பணிகள் மற்றும் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது.

(f) நிறுவகத்தின் சகல வாகனங்களுக்காகவும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது அத்துடன் சகல வாகனங்களுக்கும் எரிபொருள் மீதி மதிப்பிடுவதற்கான நடவடிக்கையினை ஜனவரி 2013 இல் இருந்து தொடங்கி இருக்கின்றது.

(g) நிறுவகத்தின் அலுவலக அங்கத்தவர்களால் பெறப்படாத புகையிரத உத்தரவுகளின் தொகை விவ.ப.பி.நி இன் ஊழியர்களிடையே இணக்கத்தையும் நடன்களையும் முன்னேற்றுவதற்காக விவ.ப.பி.நி இனால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த பிரயானத்திற்கான கட்டணத்திற்காக வழங்கப்பட்டது.

3.

3.1 குறிக்கப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்கள் மிகச்சரியானதாக இருக்கின்றது.

3.2

(a) விவபபிநி இன் ஊழியர்களுக்கு மொழித் திறன் கொடுப்பனவு பேராதனைப் பல்கலைக்கழக ஸ்தாபன கிளையினால் பிரசுரிக்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பமாஆ வின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. ஏவ்வாறாயினும் இக்கொடுப்பனவு பமாஆ சுற்றறிக்கை இல UGC/FR/6/3/4 (ะ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 01.01.2003 இற்கு பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படவில்லை. மேலதிக தெளிவுகளை பெற்றுக் கொள்வதற்காக பமாஆ இற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுதொடாபாக விவபபிநி இனால் கிடைக்கப்பெற்ற பதில் கடிதத்தின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு -2)

(b) பமாஆ இன் தாபன சுற்றறிக்கை இல 08/1997, 8/1998 மற்றும் UGC/HR/3/9/48. இற்கு அமைவாக சேமலாப நிதி (சேநி) மற்றும் ஊழிய நம்பிக்கை நிதி (ஊநநி) என்பவற்றுக்கான பங்களிப்புகளின் கணிப்பீடுகள் கல்விசார் படிக்கொடுப்பனவு கருத்தில் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் 2011.04.28 இல் பிரசுரிக்கப்பட்ட பமாஆ சுற்றறிக்கை இல 955 இற்கமைவாக 2011 மே 01 இல் இருந்து நிறுத்தப்பட்டு இருக்கின்றது.

4.1 விவ.ப.பி.நி இன் மாணவர்களுடைய புள்ளிகள் சமர்ப்பிப்பதை துரிதப்படுத்துவதற்காக முகாமைத்துவ சபைத் தீர்மானத்தின் அனுமதியுடன் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏவ்வாறாயினும் வெகுமதிக் கொடுப்பனவினை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(a) சகல மாணவர்களினதும் தரவுகள் விவபபிநி இன் அனுமதிக் கிளையினால் ஒரு கணணி மென்பொருளில் உள்ளீடு செய்யப்பட்டு இருக்கின்றது. மேலும் தரவு உள்ளீட்டு வேலைகள் நிறைவடைந்த பின்னர் உடனடியாக கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு மாணவனுக்கான மூலதன கிரயம் கணிப்பிடப்பட இருக்கின்றது.

(b) ஆராய்ச்சியாளர்களின் நிதியிடலுக்காக விவபபிநி இற்கு சிறந்த முறையொன்று இன்மையால் உள்வாரி ஆராய்சியாளர்களுக்கான நிதிகள் ஒதுக்கப்படவில்லை. ஆனால் 178.3.2 ம் இலக்க முகாமைத்துவ சபையின் தீர்மானத்திற்கு அமைவாக ஆராய்சி நிதியிடலுக்கான ஒரு ஒப்பந்தம் தற்போது தயாரிக்கப்பட்டு இருப்பதுடன் விவபபிநி இனால் தெரிவு செய்யப்படுகின்ற தேசிய முக்கியத்துவமுடைய விஞ்.முது., தத்.முது. கலாநிதி ஆராய்ச்சிகளுக்காக வருடாந்தம் நிதிகள் ஒதுக்கப்படுகின்றன.

4.3

(a) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 09 கணனி மேசைகளும் 28 கணனி துணைக்கருவிகளினதும் சிபாரிசுகளை பெறுவதற்காக ஒரு கணக்கெடுப்பு சபையினை நியமிப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றதுடன் அவற்றினை அழிப்பதற்கு அல்லது திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

(b) நீண்ட காலத்திற்கு முன்னர் அச்சிடப்பட்ட மாணவர்களுக்கான தகவல் புத்தகங்கள் தற்போது பயன்படுத்த முடியாமையினால் நிதிக் குழவின் பரிந்துரையுடனும் முகாமைத்துவ சபையின் அனுமதியுடனும் ஏற்கனவே அழிக்கப்பட்டு இருக்கின்றன.

(c) ஒரு கணனி மென்பொருளில் விவபபிறி இன் நிலையான சொத்துப் பதிவிற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் புதப்பித்தலும் இறுதிக்கட்டத்தில் இருக்கின்றது.

4.4

(a) கடந்தவருட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டதுபோல் இவ்விரு நிலையங்களும் முறையான விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றாமல் தாபிக்கப்பட்டு இருப்பதனால் அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இந்நிலையங்களின் இறுதி செயற்பாட்டறிக்கை தொடர்புடைய அதிகாரசபைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் எவ்வேளையிலும் கணக்காய்வின் பரிசோதனைக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாருட மீளாய்வுக் காலப்பகுதியியல் இந்த நிலையங்கள் தொழிற்பாட்டில் இருக்கவில்லை.

(b) கடுவல கருத்திட்டத்தின் கீழ் ஒரு சேதன பண்ணை தயாரிப்பதற்காக மென்டிஸ் மற்றும் கம்பனி இடமிருந்து ரூபா 300,000.00 மானியமொன்று கிடைக்கப்பெற்றதுடன் இது இக்கருத்திட்டத்தின் ஆரம்ப செலவுகளை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டது. இக்கரத்திட்டம் மேலே 4.4 (a) இல் குறிப்பிட்ட நிலையங்களின் கீழ் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது மேலும் இந்நிலையங்கள் மூடப்பட்டுள்ளதனால் இக்கருத்திட்டத்தின் செயற்பாடுகளும் கூட இடையிலேயே நிறுத்தப்பட்டு இருக்கின்றது.

4.5

(a) பேராதனைப் பல்கலைக்கழக பதிவாளரினால் நியமிக்கப்பட்ட விசாரனைக் குழவின் பரிந்துரைக்கு அமைவாக பொறுப்புடைய பகுதியினரிடமிருந்து விவபபிறி இனால் மேலதிகமாக செலுத்தப்பட்டவற்றை மீளபெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

(b) CARF ஆராய்ச்சி மானியதத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரனங்கள், போன்ற பெரும்பாலான சொத்துக்கள் விவபபிறி இன் சாதாரன செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட முடியாது. ஆகவே விவபபிறி இனால் ஏனைய உபகரனங்களை ஏற்கவும் அனுமதியுடன் அவ்வாறான உபகரனங்களை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

4.6 ஒரு வங்கி உத்தரவாதம் மற்றும் நிறுவுதல் வேலைகளுக்காக ரூபா 216,092.00 நடமாடும் முற்பணம் ஒன்று வழங்கப்பட்டது. இது தற்போது நிறைவடைந்துள்ளது. ஆனால் தொழில் நுட்ப மதிப்பீட்டு குழவின் பரிந்துரையினைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தினால் கொடுப்பனவு தாமதமானது. ஆகவே இந்தக் கம்பனி முறைமையினை தற்காலிகமாக நிறுத்தியது. ஆனால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழவின் பரிந்துரையுடன் அதிக தாமதத்திற்கான கட்டணமாக 5% இனை கழித்த பின்னர் நிறைவு செய்யப்பட்ட வேலைகளுக்கான இடைக்கால கொடுப்பனவு ஒன்று தற்போது வழங்கப்பட்டு இருக்கின்றது. மூாணவ அனுகல் கட்டுப்பாட்டு முறைமையினை செயற்படுத்துவதற்கு ஏற்கனவே கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஒப்பந்தத்தின் மீதி வேலைகளில் தற்போது கம்பனி ஈடுபட்டு வருகின்றது.

4.7

(a) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் 19-03-2008 ம் திகதியிடப்பட்ட பமாஆ வின் UGC/HR/09/01/59 இலக்க கடிதத்திற்கு அமைவாக தேவை ஏற்படும் போது விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட நிதியில் இருந்து செலுத்தப்படுவதற்குரிய வகையில் பதவிவெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. (இணைப்பு - 4)

இந்த கல்விப்படையணி ஏற்பாட்டினை நிரப்புவதற்கு சகல படிகளையும் உள்ளடக்கி வருடாந்தம் அன்னளவாக ரூபா 6,974,168.00 கொடுப்பனவினை செலுத்த வேண்டியிருக்கும். ஆனால் இந்த ஆளனி ஏற்பாட்டினை நிரப்பாமல் வருகை விரிவுரையாளர்களை சேர்த்துக் கொண்டால் மொத்தமாக செலுத்தக்கூடிய தொகையாக மணித்தியாலத்திற்கு குறைந்தது ரூபா 30,000.00 இனை செலுத்தி குறைந்தது 2 கிரடிட் வழங்க முடியும். ஏனவே இந்த ஆளனியினை நிரப்பாமல் அதேசேவையினை பெறுவதற்கு மொத்மாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 960,000.00 (ரூபா (30,000.00 x 2 x 2 x 8) ஆகம். ஏனவே சகல கல்விசார் ஆளனி நிரப்புதல் அவ்வளவு பெறுமதியானதல்ல மேலும் தேவையேற்படும் போது சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

மேலும் இரண்டு சிரேஸ்ட விரிவுரையாளர்களின் பதவிகளை கற்பித்தல் உதவியர்களாக மாற்றுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் ஒன்று விடப்பட்டுள்ளது. (இணைப்பு - 5)

(b). குறிக்கப்பட்டது. இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4.8 ஏற்கப்படவில்லை. நிறுவகத்தின் சகல மேலதிக நிதிகளும் பணிக்கொடைக்கான ஏற்பாடு உள்ளடங்கலாக பொருத்தமான ஒரு திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு இருக்கின்றன.

5.

5.1 2011 ம் ஆண்டில் 3 ½ மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்த தொழிற்சங்க நடவடிக்கை காலப்பகுதியில் கல்விசார் அலுவலர்கள் தமது தன்னார்வ பதவிகளில் இருந்து விலகிருந்தமையினால் இவ்வருட மீளாய்வின் கீழ் இவ்வருட காலப்பகுதியயல் கற்கை சபைகளுக்கான குறைந்த மட்டக் கூட்டங்கள் நடைபெறவில்லை. ஆனால் சகல கூட்டங்களுக்குமான வருடாந்த கலன்டர் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு இரக்கின்றன அத்துடன் பட்டியலிடப்பட்டபடி சகல கூட்டங்களையும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றன.

5.2

(a) கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் காட்டப்பட்டவாறு விவபபிறி இன் பொருட்கள், உபகரனங்கள், சேவைகளுக்கான ஏற்பாடுகள், நிர்மானம் மற்றும் புதப்பித்தல் என்பவற்றின் பொருட்கொள்வனவுடைய சகல விடயங்களையும் உள்ளடக்கியதாக 2013 ம் ஆண்டுக்கான ஒரு பொருட்தருவித்தல் திட்டம் தயாரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(b) ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2013 ம் ஆண்டுக்கான பொருட்தருவித்தல் திட்டத்திற்கான கொள்வனவு காலஅட்டவணை தயாரிக்கப்ட்டு தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்பபட்டுள்ளது.

5.3

(a) 08 வருமான தலைப்புகளுக்கு தொடர்புடைய மதிப்பீடுகள் மற்றும் வருமான சேகரிப்புகள் என்பவற்றிற்கான விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன:

விடயம்	பாதீட்டு தொகை	அசல் வருமானம்	வேறுபாடு	விகிதாசாரம் %	விளக்கம்
கடன் வட்டி	200,000	209,008	(9,008)	4.50	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப் பகுதியில் எதிர்பார்கப்பட்டதற்கு மேலாக ஊழியர் கடன்கள் இருந்தமையினால் வட்டிகளும் கூட எதிர்பார்கப்பட்டதற்கு அதிகமாக கிடைத்தது.
முதலீட்டு வட்டி	6,000,000	9,665,419	(3,665,419)	61.09	இவ்வருட காலப்பகுதியில் நிலையான வைப்புகளுக்கான வங்கி வட்டி வீதங்களில் அதிகரிப்பு காரணமாகும்.
சொத்துக்களில் இருந்தான வாடகை	330,000	452,250	(122,250)	37.04	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப் பகுதியில் விருந்தினர் விடுதி மற்றும் அரங்குகளுக்கான வாடகைக் கட்டணம் அதிகரித்தது.

இதர பெறுகைகள்	400,000	1964,713	(1,564,713)	391.17	கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போல புலமைப்பரிசில் நிதி மற்றும் ஏனைய செயற்படா மானியங்கள் இரத்து செய்யப்பட்டதுடன் நிறுவகத்தின் வருமானத்திற்கு மாற்றப்பட்டது.
மாணவ நலன்புரி கட்டணங்கள்	250,000	286,755	(36,755)	14.70	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப் பகுதியில் நிலுவைகள் செலுத்தப்பட்டன.
மேற்பார்வை கட்டணங்கள்	1,100,000	1,109,657	(9,657)	0.87	0.9%. சதவீதமாக அதிகரித்தது.
வருடாந்த காங்கிரஸ் கட்டணங்கள்	800,000	5,407,795	(4,607,795)	575.97	கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போல காங்கிரஸ் நிதி இரத்து செய்யப்பட்டதுடன் நிறுவகத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டது.
மேந்தலைக் கட்டணங்கள்	600,000	1,348,493	(748,493)	124.74	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப் பகுதியில் எல்லைகளை கடத்தல் மற்றும் கெப்நெட் லங்கா கருத்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் இருந்து மேந்தலைக் கட்டணங்களின் பெறுகை

(b) ரூபா 13,798,118.00 மொத்த தொகையுடன் 10 வருமான தலைப்புகளுக்கு தொடர்புடைய மதிப்பிடப்பட்ட வருமானத்தை அடைய முடியாமைக்கான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளன:

விடயம்	பாதீட்டு தொகை	அசல் வருமானம்	வித்தியாசம்	விகிதாசாரம் %	விளக்கம்
நூலக கட்டணம்	950,000	300,540	649,460	68.36	மூன்று மாதங்களுக்கும் மெலாக தொடர்ந்த பல்கலைக்கழக முறைமையின் கல்விசார் அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர்களின் சேர்க்கைகள் தாமதமாகியிருந்தன. ஆகவே எதிர்பார்கப்பட்ட வருமானம் கிடைக்கப்பெறவில்லை.
பதிவுக் கட்டணம்	6,000,000	4,966,910	1,033,090	17.21	-Do-
விரிவுரை கட்டணம்	30,000,000	19,077,414	10,922,586	36.40	-Do-
பரீட்சைக் கட்டணம்	500,000	409,800	90,200	18.04	-Do-
மருத்துவ கட்டணம்	250,000	191,605	58,395	23.35	-Do-
ததொ. கட்டணம்	2,500,000	2,078,051	421,949	16.87	-Do-
பிரசுரங்களின் விற்பனை	1,100,000	655,707	444,293	40.39	-Do-
பழைய களஞ்ச விற்பனை	20,000	2,322	17,678	88.39	எதிர்பார்க்பட்டவாறு இவ்வருட காலப்பகுதியல் பழைய களஞ்சிய விற்பனை மேற்கொள்ளப்பட வில்லை
வெளிவாரி சேவைகள்	200,000	55,000	145,000	72.50	எதிர்பார்கப்பட்ட வருமானம் கிடைக்கவில்லை.
நூலக தண்டப்பணம்	32,000	16,533	15,467	48.33	நூலகத்தின் பொருத்தமான முகாமைத்துவம் காரணமாக புத்தகங்கள் மாணவர்களால் குறித்த நேரத்தில் திருப்பியளிக்கப்பட்டதனால் மீளாய்வின் கீழ் இவ்வருட காலப்பகுதியில் தண்டப்பணம் பெறுகைகள் குறைந்திருந்தது.

(c) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட செலவுகள் ரூபா 19,383,743 ஆக மாற்றப்பட வேண்டும். மேலும் செலவு ஒதுக்கத்தில் மதிப்பிடப்பட்ட செலவுக்கு மேலதிகமானதற்கான விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன:

விடயம்	பாதீட்டு செலவுகள்	அசல் செலவுகள்	சேமிப்புகள்	விகிதாசாரம் %	விளக்கங்கள்
இரசாயன & கண்ணாடிப் பொருட்கள்	700,000	11,350	688,650	98.37	அசல் செலவுகள் ரூபா 654,923.00 ஆக மாற்றப்பட வேண்டும். அதற்கிணங்க மேலதிக செலவுகள் 1.6 % ஆக இருந்தது.
போக்குவரத்து	475,000	161,455	313,545	66	எதிர்பார்கப்பட்ட செவாக இருந்தது.
சம்பளங்கள் & ஊதியங்கள்	16,481,000	12,745,477	3,735,523	22.66	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப்பகுதியில் பட்டியலிடப்பட்டதற்கு அமைவாக சில கல்விசார் அலுவலர்களின் பதவிகளை நிரப்புதல் முடிவு செய்யப்படவில்லை.
பசேநி	2,103,000	1,751,858	351,142	16.69	-Do-
ஊநநி	507,000	454,107	454,107	10.43	-Do-
வாழ்கைச் செலவுப் படி	3,402,000	3,074,205	327,795	9.63	-Do-
ஏனைய கொடுப்பனவுகள்	83,000	21,637	61,363	73.93	-Do-
வருகை விரிவுரையாளர் கட்டணம்	14,000,000	7,926,163	6,073,837	43.38	கல்வி அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக திட்டமிடப்பட்டிருந்ததற்கமைவாக விரிவுரைகள் நடைபெறவில்லை என்பதனால் திட்டமிடப்பட்ட செலவுகளும் ஏற்படவில்லை.
வருகை விரிவுரையாளர் போக்குவரத்து கொடுப்பனவு	1,500,000	408637	1,091,363	72.75	-Do-
பரீட்சை கட்டணம்	2,100,000	1,178,716	921,284	43.87	-Do-
மேலதிக நேரம்	2,300,000	1,938,769	361,231	15.70	கல்வி அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, மேலதிக நேரத்தின் ஏனைய சேவைகளுக்கான ஏற்பாடுகளும் கூட மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது.
விடுமுறைக் கால கொடுப்பனவுகள்	171,000	24,417	146,583	85.72	-Do-
தபால் கட்டணம்	300,000	203,836	96,164	32.05	-Do-
போக்குவரத்து செலவுகள் (உள்ளூர்)	300,000	86,548	213,452	71.15	திட்டமிட்டதற்கமைவாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை & இந்த செலவுகள் பிரிவில் அதிக பாதீடு அறிக்கையிடப்பட்டு இருக்கின்றது.
மின்சாரம்	1,300,000	935,252	364,748	28.05	-Do-

காகிதாதிகள்	1,250,000	697,070	552,930	44.23	-Do-
எரிபொருள்	700,000	600,189	99,811	14.25	-Do-
இயந்திர மற்றும் மின்சார வினியோகம்	75,000	24,999	50,001	66.66	-Do-
பயிற்சிப்பட்டறைகள்	2,000,000	321,500	1,678,500	83.92	-Do-
கல்வி ஆராய்ச்சி	300,000	131,775	168,225	56.07	-Do-
பொழுதுபோக்கு செலவுகள்	300,000	216,106	83,894	71.91	-Do-
மருத்துவ வினியோகம்	75,000	9,408	65,592	87.45	ஏற்கப்படவில்லை. உண்மையான செலவு ரூபா 65,536.00 ஆக இருக்கின்றது.
வாகன திருத்தல் மற்றும் பராமரிப்பு	200,000	177,773	22,227	11.11	திட்டமிடப்பட்டதற்கு அமைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வில்லை.
நீர் கட்டணம்	200,000	143,422	56,578	28.28	ஏற்றுக்கொள்ளப்பட்டது. .
ஊழிய அபிவிருத்தி	200,000	41,784	158,216	79.10	இந்நிறுவகத்தின் ஊழியர்களுக்கான பயிற்சிப்பட்டறை எதிர்பார்கப்பட்டபடி ஏற்பாடு செய்யப்பட்டவில்லை.
பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி மற்றும் பிரசுரங்கள்	2,400,000	883,293	1,516,707	63.19	இப்பிரிவின் கீழ் வெளிநாட்டு மாணவ மாணியங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்தது ஆனால் வேறு மானிய கணக்குகளின் கீழ் கணக்கிடப்பட்டது.
விடுமுறை உத்தரவு பத்திரங்கபள்	30,000	12,680	17,320	57.73	எதிர்பார்கப்பட்டதற்கு அமைவாக செலவுகள் ஏற்பட்டு இருந்தது.
நன்கொடைகள்	25,000	7,500	17,500	70	ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக சேவையில் குறிப்பிடப்பட்ட வருடங்களை நிறைவு செய்த ஊழியர்களுக்காக 2011 ம் ஆண்டிற்கான நீண்ட சேவை விருதுகளுக்காக மதிப்பீடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது ஆனால் இவ்வருட மீளாய்வின் கீழ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையில் இருந்து பரிந்துரைகள் கிடைக்கவில்லை.
வங்கி கட்டணம்	100,000	28,082	71,918	71.91	ஏப்ரல் 2011 இல் இருந்து அமுலுக்கு வரும் விதத்தில் வங்கிப் பற்று வரி நீக்கப்பட்டிருந்தது.
ஏனையவைகள்	800,000	75,548	724,452	90.55	எதிர்பார்கப்பட்டதற்கு அமைவாக செலவுகள் ஏற்படவில்லை.

(d) 17வது பிரிவுடன் தொடர்புடைய ஒதுக்கப்பட்ட தொகைகளுக்கு அதிகமாக ஏற்பட்ட செலவுகளுக்கான விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன:

விடயம்	பாதிடப்பட்ட செலவுகள்	அசல் செலவுகள்	சேலவுக்கு மேலானது	வீதம் %	விளக்கங்கள்
ஓய்வூதியம்	371,000	428,431	(57,431)	15.48	19-07-2011 ம் திகதியிடப்பட்ட பமாஆ சுற்றறிக்கை இல 14/2011 இற்கு அமைவாக 2006 இல் இருந்து வாழ்கைச் செலவுப் படிக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டது.
கல்வி கொடுப்பனவு	329,000	611,967	(282,967)	86	05-08-2011 ம் திகதியிடப்பட்ட பமாஆ சுற்றறிக்கை இல 961 இற்கு அமைவாக 2011 இலிருந்து கொடுப்பனவுகள் அதிகரித்து இருந்தன.
மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு	71,000	74,960	(8,960)	5.57	இவ்வருட மீளாய்வின் கீழ் அடந்த ஆண்டுக்கான நிலுவைகள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை இது செலுத்தப்பட்டு இருந்தது.
ஓய்வுப் பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள்	900,000	2,337,940	(1,437,940)	159.77	19-07-2011 ம் திகதியிடப்பட்ட பமாஆ சுற்றறிக்கை இல 14/2011 இற்கு அமைவாக நிலுவைகள் பணிக்கொடை கொடுப்பனவின் கணிப்புகளுக்காக வாழ்கைச் செலவுப் படி கருத்தில் கொள்ளப்பட்டது.
சீருடைகள்	40,000	81,310	(41,310)	103.27	இவ்வருடத்தில் கடந்த வருடத்திற்கான ஒரு நிலுவைக் கொடுப்பளவு செலுத்தப்பட்டது.
ஏனையவைகள்	525,000	706,641	(181,641)	34.59	புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களுக்கான பொழுதுபோக்கு கொடுப்பனவு எடுக்கப்பட்டு இருந்தது.
இயந்திரமும் உபகரணமும் மற்றும் சொத்துக்கள்	475,000	533,290	(58,290)	12.27	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப்பகுதியில் ஏற்பட்ட சில தேவையான செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்க வில்லை.
தொடர்பாடல்	1,100,000	1,116,474	(16,474)	1.49	குறை மதிப்பீட்டு வீதமாக 1.5% இருக்கின்றது.

பாதுகாப்பு சேவைகள்	175,000	272,625	(97,625)	55.78	29.08.2011 ம் திகதியிடப்பட்டு உயர்கல்வி அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட கடிதத்திற்கு அமைவாக ரக்னா லங்கா லிமிட்ட் இடமிருந்து பாதுகாப்பு சேவைகளை பெறுவதற்கு கட்டாயமாக்கப்பட்டது மேலும் இதற்கான விலைகள் எதிர்பார்கப்பட்டதை விடவும் அதிகரித்தது.
சுத்தம் மற்றும் துப்பரவு சேவைகள்	700,000	832,703	(132,703)	18.95	இவ்வருட காலப்பகுதியில் சேவைகளை புதப்பிக்கும் போது விலைகள் எதிர் பார்கப்பட்டதை விடவும் அதிகரித்திருந்தது.
முத்திரைக் கட்டணங்கள்	750,000	798,354	(48,354)	6.44	குறை மதிப்பீட்டு வீதமாக 6.4% இருக்கின்றது.
ஏனையவைகள்	305,000	376,720	(71,720)	23.51	மீளாய்வின் கீழ் இவ்வருட காலப்பகுதியில் விவபபிறி இன் முறைமை பகுப்பாய்வு பதவி காலியாக இருந்தது மேலும் தேவையான சேவைகளை பெறுவதற்காக தகவல் தொழில் நுட்ப நிலையத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டது.
விசேட சேவைகள்	550,000	669,000	(119,000)	21.63	29-04-2011 ம் திகதியிடப்பட்ட பமாஆ சுற்றறிக்கை இல 14/2011இற்கு அமைவாக இவ்வருட காலப் பகுதியில் முகாமைச் சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு படி அதிகரித்து இருந்தது.
தொழில்சார் மற்றும் ஏனையவைகள்	350,000	477,758	(127,755)	36.50	23-04-2012 ம் திகதியிடப்பட்ட பமாஆ சுற்றறிக்கை இல 8/2010 இற்கு அமைவாக தொழில் நுட்ப பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கான கொடுப்பனவு ரூபா 150.00 இலிருந்து ரூபா 500.00 ஆக அதிகரித்தவை கொடுபட்டது.
மாணவ மற்றும் அலுவலர் அபிவிருத்தி	200,000	205,875	(5,875)	2.93	2%. சதவீதமாக அதிகரித்து இருக்கின்றது.

பட்டமளிப்புகள்	1,600,000	1,780,695	(180,695)	11.29	சில செலவு பகுதிகளின் மதிப்பிடப்பட்ட தொகை மிகையானது மேலும் இச் செலவுகளை நிவர்த்தி செய்வதற்கு வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து ஆதரவு பெறப்பட்டது.
பாடநெறிப் பொருட்களும் புத்தகங்களும்	5,000,000	5,786,096	(786,096)	15.72	சகல பாட புத்தகங்களையும் இந்திய பதிப்புகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன எங்கெல்லாம் சில புத்தங்களுக்காக இந்திய பதிப்பு பெறமுடியாத போது கேள்விப் பத்திரங்கள் தருவிக்கப்பட்டது. ஆகவே இப்புத்தகங்களுக்காக சர்வதேச பதிப்புகள் கொள்வனவு செய்யப்பட்டது இதனால் மதிப்பிடப்பட்ட தொகை மிகைத்தது. எவ்வாறாயினும் அதிகரிக்கப்பட்ட தொகையினை மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கணக்காய்வு அறிக்கையில் சித்தரிக்கப்பட்டதற்கு அமைவாக, யதார்தமான முறையில் குறைந்த விலகல்களுடன் 2012 ம் ஆண்டில் இருந்து ஒரு பாதீடு தயாரிக்கப்பட்டு இருக்கின்றது. இதில் வருமானம் மற்றும் செலவுகளின் மதிப்பீடுகளின் போது விசேட அவதானம் செலுத்தப்படும்.

5.4

(a) வருடாந்த அறிக்கையில் மாணவ எண்ணிக்கையாக குறிப்பிடப்பட்டது 2010 ம் ஆண்டின் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்த மாணவர்களாக இருக்கின்றது. கணக்காய்வு அறிக்கையில் எங்கெல்லாம் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்தோ அவைகள் விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையாக இருக்கின்றது.

(b) 2011 ம் ஆண்டு அறிக்கையில் தவறுதலாக இந்நிகழ்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2012 ம் ஆண்டறிக்கையில் திருத்தப்பட்டுள்ளது.

6. குறிக்கப்பட்டது. கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டவாறு இவ்விடயம் சரிப்படுத்துவதற்குரிய சரியான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கும் இதுவிடயமாக அறிவிக்கப்படவுள்ளது.

தாங்களின் வினவல்களுக்கு மேலுள்ள விளக்கங்களை பதில்களாக தருவது எனது தனிப்பட்ட பொறுப்பாக இருக்கின்றது.

ஓப்பம்/ பேராசிரியர். கொலின் என். பீரிஸ்
பணிப்பாளர், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு
3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உபவேந்தர், பேராதனைப் பல்கலைக்கழகம்
5. பிரதி உள்ளக கணக்காய்வாளர், பேராதனைப்பல்கலைக்கழகம்